விலை ரூபா 1-00

வினா-விடை வகுப்புக்கள்
[PAPER CLASSES]
A/L AUGUST 83
தாவரவியல்
திரு S. சரிவணனந்தா B. Sc
விலங்கியல்
செல்வி L. சுந்தரம்பிள்ளை B. Sc
இரசாயனம்
திரு. N. S. மணியம் B. Sc
பௌதிகம்
திரு. B. கணேஷ் B. Sc
NEW SCIENCE ACADEMY
315, பலாலி வீதி,
திருநெல்வேலி. [5945]

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 10 ரபி. ஆகி 8 இதழ் 345

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23—1—83

டியூஷன்
ஆங்கிலம்/சிங்களம்
9ம் 10ம் வகுப்புகள்
கிழமையில் நாலு வகுப்புகள்
ஒரு வகுப்பில்
பத்துப் (10) பிள்ளைகள் மாத்திரம்
ஆரம்பம்: 1-2-83
61A, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
5865

# மாவத்தகமவில் விழுந்தது 'கொஸ்மஸ்' துண்டுதானா?

## உண்மை நிலை அறிய விஞ்ஞானிகள் பரிசோதனை

(கொழும்பு)

சோவியத் செய்மதியான கொஸ்மஸ் துண்டு ஒன்று மாவத்தகமவில் நேற்று விழுந்தது உண்மைதானா என்பது குறித்து விஞ்ஞானிகள் குழுவொன்று ஆராய்ந்து வருகின்றது.

சோவியத் அனுப்பிய 'கொஸ்மஸ் 1402' துண்டு துண்டாக உடைந்து செயலிழந்து வளிமண்டலத்துக்குள் பிரவேசித்து பூமி ஈர்ப்பினால் இலங்கையிலும் விழும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது ஆனாலும் இலங்கையிலுள்ள சோவியத் தூதர் இவ்விதமான அச்சம் அர்த்தமற்றது என்று தெரிவித்திருந்தார்.

மாவத்தகமவில் விழுந்தது கொஸ்மஸ் துண்டுதானா என்ற சந்தேகத்துக்கு விஞ்ஞானிகள் குழு ஆராய்ந்து பதிலளிக்கும் அங்கு விழுந்த பொருளை விஞ்ஞானிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

முன்னர் வந்த செய்தி விபரம் வருமாறு:

விண்வெளியில் பழுதடைந்து பூமியை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கும் கொஸ்மொஸ் செய்மதியின் ஒரு பகுதி இலங்கையில் மாவத்தகம என்ற இடத்தில் வீழ்ந்திருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது.

நேற்றைய தினம் மாவத்தகம பகுதியில் வானத்திலிருந்த ஒரு பொருள் நேராகப் பூமியில் வந்து வீழ்வதை இருபிள்ளைகள் நேரில் கண்டதாகப் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

இத்தகவலை குருநாகல் பொலிஸ் அதிபர் வெளியிட்டுள்ளார்.

மாவத்தகம பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் தோட்டப்பகுதியில் இவ்வஸ்து விழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## பத்து சந்தேகநபர்களுக்கு 31வரை றிமாண்ட்!

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பெற்றோல் நிலையக் கொள்ளைச்சம்ப சந்தேக நபர்கள் 10 பேரும் இம்மாதம் 31-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதுவருடத் தினத்தன்று இரவு 8 மணிபோல் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பெற்றோல் நிலையத்திற்குள் துப்பாக்கியுடன் நுழைந்த இரு இளைஞர்கள் ஊழியர்களைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 221 ரூபா பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு செல்லும்போது ஊழியர் திரு எஸ். கந்தசாமி கொள்ளையர்களின் பின்னால் கூக்குரலிட்டுக் கொ

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று புலேந்திரன் இறுதிச்சடங்குகள்

[வவனியா]

வவனியா ஐ. தே. கட்சி அமைப்பாளர், கொலையுண்ட திரு. புலேந்திரனின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறவிருப்பதையொட்டிய ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளன. இறுதி ஊர்வலம் நடைபெறவிருக்கும் வீதிகள் எல்லாம் வெள்ளைக் கொடிகள், வாழைகள், மகர தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. இ. போ. ச. பஸ்களில் திரு. புலேந்திரனின் படங்கள் ஒட்டப்பட்டுள்ளதுடன் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

திரு. புலேந்திரனின் பூதவுடல் அலங்கரிப்பட்ட இரதத்தில் வைத்து, தகனம் நடைபெறும் இடத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

நகரமன்ற முன்றலில் தகனக்கிரியைகள் நடைபெற இருப்பதையொட்டிய ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. இங்கு இன்று ஜனாதிபதியும், பிரதமரும் ஏனைய அமைச்சர்கள் பிரமுகர்கள் அஞ்சலி உரைகள் நிகழ்த்தவிருக்கிறார்கள்.

நேற்றைய தினம் பல பிரமுகர்களும், பொதுமக்களும் திரு. புலேந்திரனின் இலத்துக்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இரத்தினபுரி மாவட்ட அமைச்சர் திரு. நந்தா மத்தியூ, பெற்றோலியம் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் திரு. காமினி மாரப்பன, கல்விச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் திரு. சந்திரா சொய்ஸா, மிகுந்தலை எம். பி திரு. தயா வலகம்பாகு, உள்ளூராட்சி பிரதியமைச்சர் பேர்சி சமரவீரவின் பாரியார் ஆகியோரும் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

வவனியா மாவட்ட அமைச்சர் அலுவலகத்திலும் கச்சேரி

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிமுனையில்கொள்ளை! ரூ. 22,000 சம்பளப் பணம்!!

(கொழும்பு)

கல்லூரி அதிபர் ஒருவரை வழிமறித்துத் தாக்கிப் படுகாயம் விளைவித்த கொள்ளையர் கோஷ்டியொன்று அவர் வசமிருந்த ஆசிரியர் சம்பளத் தொகையான 22 ஆயிரம்ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நொச்சியாகம பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நொச்சியாகம கலதிவுலுவெவ மகாவித்தியாலய அதிபர் திரு. யு. பி. செமாசிங்க பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக்கொண்டு இன்னொரு ஆசிரியருடன் சைக்கிளில் வரும்போது 4 கொள்ளையர்கள் இடைமறித்தனராம். இவர்களிடம், கிறிஸ்கத்திகள், வாள், றிவோல்வர் போன்ற ஆயுதங்கள் இருந்தனவாம். படுகாயமுற்ற கல்லூரி அதிபர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [இ]

## இன்று நடக்கும் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்திய விமானப்படை குழுவுக்கும் யாழ். உதைபந்தாட்ட லீக் கோஷ்டிக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

முன்னாள் இலங்கை தேசிய உதைபந்தாட்ட பயிற்சியாளர் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வர்.

## யாழ். நூலகத்துக்கு ரூ. 3,597 அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக ஆசிரியர்களும், பட்டதாரி மாணவர்களும் இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கும் தமது இயக்கத்தின் சார்பில் யாழ். நூலக மீளமைப்புக்காக ரூபா 3,597க்கான ஒரு காசோலையை யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனிடம் கையளித்துள்ளனர்.

## "வடக்கு—கிழக்கில் தேர்தல் இல்லாவிட்டால் கூட்டணி எம். பிக்கள் தொடர்ந்து பதவி வகிப்பார்களா?"

(மட்டுவில்)

கூட்டணி எம். பிக்கள் தங்கள் பதவிக்கால எல்லை முடிந்ததும் ராஜினுமா செய்தால் அதற்கான தேர்தல் வடக்கு கிழக்கில் நடக்குமா? தேர்தல் நடக்காவிடில் இப்பொழுதுள்ள கூட்டணி எம். பிக்களே தொடர்ந்து பதவியில் இருப்பார்களா? அல்லது வேறு பேரை நியமிப்பதா? என்பது பற்றி ஏப்ரல் மாதம் நடக்கவிருக்கும் கூட்டணி மாநாட்டில் தான் தெரியும்.

சாவகச்சேரி தமிழர் விடுதலை கூட்டணி கிளை பொதுச் சபை கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. வி. என். நடராத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

(8ம் பக்கம் பார்க்க)

## அரங்கேற்றம்

(கொழும்பு)

செல்வன் குறளரசு வீரசிங்கத்தின் மிருதங்க அரங்கேற்றம் இன்று மாலை பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கொழும்பு கலைப்பிரியா இசை மன்றத் தலைவர் கலைஞர் ஏ. எஸ். சந்திரசேகரத்தின் மாணவர் குறளரசு. பிரபல தொழில் அதிபர் வேலணை வீரசிங்கம் தம்பதிகளின் மூத்த மகன் குறளரசு இளைப்பாறிய நீதியரசர் திரு வி. இவபிரமணியம் தலைமையில் இவ்வரங்கேற்றம் நடக்கிறது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பொலிகண்டி, கடற்கரை வீதியில் 5 அறை, 2 ஹோல், குசினி, கருச் மற்றும் சகல வசதிகளுடைய வீடு ('பைப், வசதியுண்டு) 8 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தென்னை, மா மரங்கள் உண்டு. விலை விபரங்களுக்கு: A. M. விஜயநாதன், கடற்கரை வீதி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. 5875

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் நாவலர் ரோட்டில் 3 அல்லது $3\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சபாரத்தினம், 304, கண்டி ரோட், யாழ்ப்பாணம். 5871

கொக்குவில் பொற்பதிரோட்டில் வளாகத்திற்கு கிட்ட வீடு கட்டுவதற்கேற்ற 6 பரப்பு காணியும், யாழ். இந்துமகளிர் கல்லூரிக்கருகாமையில் 3 காணித் துண்டுகளும், இணுவில் ஆஸ்பத்திரிக்குக் கிட்ட 5 பரப்புக் காணியும், சாவகச்சேரி டச் ரோட்டில் 6 பரப்புக் காணியும், ஸ்ரான்லி வீதி மத்தியில் ஒரு கடையும் உடன் விற்பனைக்குண்டு. 78, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (மகளிர் கல்லூரிக்கருகாமையில்) 5915

கோண்டாவில் பலாலி ரோட்டுக்கு அருகில் வீடு கட்டக் கூடிய கிணற்று வசதியுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு ப. கிருஷ்ணமூர்த்தி, பலாலி ரோட், கோண்டாவில் கிழக்கு. 5916

ஜெர்மனியில் இருந்து தருவிக்கப்பட்ட பிலிப்ஸ் 20'' கலர் T. V. With Controler, Panasonic வீடியோ டெக் (2200), திரி இன் வன் (Urini-versal), வீடியோ கசட் (படம் பதித்தபடி) Western Music Records உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு S. பாலசுப்பிரமணியம், 5 கச்சேரி லேன் (கச்சேரிக்குப் பின்புறமாக), யாழ்ப்பாணம். 5920

திருநெல்வேலி வடக்கில் காணி விற்பனைக்குண்டு. நாலு பரப்பு தொழிற்சாலைக்கு அல்லது விவசாயத்திற்கு தற்பொழுது உதவும். போக்குவரத்தும் மின்சார வசதியும் உண்டு. கோண்டாவில் சந்தியிலிருந்து முக்கால் கட்டை. தொடர்பு:- பி. தியாகராஜா, (Near Pumping Station), 86/8, பலாலி ரோட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 5936

டீசல் மொறிஸ் ஒக்ஸ்வேர்ட் கார் நல்ல நிலைமையில் விற்பனைவுக்குண்டு. தொடர்பு கொள்ளவும் த. விவேகானந்தன், (லண்டன் கிறீன் கிவன் ரோட், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (5937)

கொடிகாமம் பருத்தித்துறை வீதி சுட்டிபுரம் அம்மன் கோயிலுக்கு வடக்குப்புறக் குளத்திற்கு அண்மையில் 30 பரப்புப்பனங்காணி உண்டு. தொடர்பு கொள்ளவும்: வை. கந்தசாமி, அல்வாய் தெற்கு, அல்வாய். 5924

24 ஸ்ரீ 5000 தொடர் இலக்க இன்ரநஷனல் ரிப்பர் லொறி நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: நடராசா, சேதுபதி வாசம், வலந்தலை, காரைநகர். 5926

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகிலுள்ள சோமசுந்தரம் அவினியூ வீதியும் ரயில் பாதையும் சந்திக்கும் இடத்திற்கு அருகில் $1\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தபால் மூலம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- டாக்டர் நா சண்முகநாதன், முத்துப்பிள்ளை மருத்துவ நிலையம், கோணுவலை, வரணிளான். 5925

புதிய, பழைய தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் (All Key Board), ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி சங்கர், ஹாட்லி இன்ஸ்ரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 5561

மானிப்பாய் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட நெல் குத்தும், மா, மிளகாய் அரைக்கும் அரிசி ஆலை விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5914, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 5914

அச்சுவேலி வடக்கு பிள்ளையார் கோவில் வீதியில் சகல வசதிகளுமுடைய பெரிய வீட்டுடன் $5\frac{1}{2}$ பரப்புக் காணியும், அச்சுவேலி வடக்கு செல்லமுத்து வீதியில் $3\frac{1}{4}$ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு சி. முத்துசுவாமி, 'திருமால்' அச்சுவேலி-வடக்கு. (5929)

பளையில் 20 ஏக்கர் தென்னந்தோட்டம் உடனடியாக விற்பனைக்குண்டு. இளம் மரங்கள், யாவும் காய்க்கும் பருவம். விபரங்களுக்கு செ. அழகராஜா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. [5930]

தோட்டம் செய்யப்பட்டு வரும், வீடு கட்டக்கூடியதுமான 9 பரப்பு, உடுவில் கிழக்குப் பகுதியில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு M திருஞானசம்பந்தன், 350 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (2ம் கி.மீ. கட்டை அருகில்) யாழ்ப்பாணம். [5932]

1 சிறி 2000 மேல்பட்ட A 35 கார் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். மணியம்ஸ் புடவை நிலையம் நம். 16, நவீன சந்தை யாழ்ப்பாணம். [5935]

### பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### ஏல விற்பனை

ஸ்திரி (அயன்) பெட்டி,
மின்சார அடுப்பு, வாணிஸ்,
பொலிஸ்,
பெயின்ற் வகைகள்
மற்றும்
45 கலன் புதிய
வெ. தகரங்கள்,
லொறி பழைய
உதிரிப்பாகங்கள் என்பன

இடம்: பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கக் காரியாலயம்.

காலம்: 1983-01-28 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி.

பொது முகாமையாளர்,
பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்.
பருத்தித்துறை.
1983-01-20. (5933)

## தேவை

5 வருட அனுபவமுள்ள உழவுயந்திர (ரக்ரர்) சாரதி உடன் தேவை றைவிங் லைசென்சுடன் நேரில் வரவும். 11/1, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 5907

வாடகைக்குத் தேவை தனி வீடு அல்லது பகுதி (அனெக்ஸ்) ஒரு ஆபீஸ் அறையும் ஒரு படுக்கை அறையும் ஏனைய வசதிகளுடன் தனி ஒருவருக்கு முக்கியமாக யாழ். பெரிய கடையிலிருந்து ஒரு மைல் தூர எல்லைக்குள் உடனடியாகத் தேவை. விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல:5878 மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். 5878

## பயிற்சி

கொம்பியூட்டர் புறோகிறுமிங், றேடியோ - டெலிவிஷன் எலக்றிக்கல் வயறிங், Hotel Management குறுகிய காலப் பயிற்சிகள், Spoken English ஒரு மாதத்தில் பேச, எழுத வாசிக்கப் பயிற்சிகள். அனைவரும் சேரலாம். ஆரம்பம்: 23-01-82. விபரம் நேரில். The School of Computer Studies, 52/1, கனகரத்தினம் கட்டிடம், (வீனஸ் றெக் கோடிங்பார் மேல்மாடி), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5856)

### பனை அபிவிருத்திச் சபை
### வழங்குநரைப் பதிவுசெய்தல் 1983

பனை அபிவிருத்திச் சபைக்கு 1983-ம் ஆண்டு ஒடியல், புழுக்கொடியல், ஒடியல்மா, புழுக்கொடியல்மா, பனாட்டு, பாணிப்பனாட்டு, பனங்கட்டிக் குட்டான், பனங்கட்டி, பனஞ்சீனி, கல்லாக்காரம் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக வழங்கக்கூடிய உற்பத்தியாளர்களிடமிருந்தும், உற்பத்திச் சங்கங்களிடமிருந்தும் வழங்குநர்களாகப் (Suppliers) பதிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 16-02-83.

தலைவர்
பனை அபிவிருத்திச்சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
22-01-83. 5906

### உடன் விற்பனைக்கு

யாழ் - பருத்தித்துறை வீதியிலிருந்து 1/4 மைல் தூரத்தில் கட்டைப்பிராயில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: M. சபாபதி, கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 5923

### விற்பனையாகின்றன!

இறக்குமதி
ஒட்டுப் பலகைகளும்
அழகிய தேக்கம்
முகப்புக் கதவுகளும்
வேண்டிய
அகல, உயரங்களில்
பெற்றுக்கொள்ளலாம்

**இப்ராகிம் ஜபார்ஜி,**
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 22409

## எலக்ரோனிக் வாக்குப்பதிவு சாதனம்

புதுடில்லி ஜன. 22

அடுத்த 3மாத காலத்திற் படுத்துவது பற்றி இந்தியதேர்குள் எலக்ரோனிக் வாக்குப் தல் கமிஷன் ஆராய்ந்துவருகி பதிவு சாதனங்களைப் பயன் றது. (வெ)

### கற்பூரத் தொழிற்சாலைக்கு
### பெண்கள் தேவை

கற்பூரத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள 30 வயதிற்குட்பட்ட பெண்கள் தேவை. விண்ணப்பங்கள் 31-1-83 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விலாசம்:

முகாமையாளர், நியூ விஜயா ஸ்ரோர்ஸ்,
146, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(5931)

### யாழ்ப்பாண அக்கடமி
### க. பொ. த உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984
### மீட்டல் வகுப்புகள்

84ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 31-1-83ல் ஆரம்பமாகின்றன. 81ம் ஆண்டில் குறைந்த பெறுபேறுகள் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். சேர பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்

தொலைபேசி எண்: 22617
376, பிரதானவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [5895]

### நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### இ. செல்லையா

தோற்றம்: 15-4-1905 மறைவு: 25-12-1982

கடந்த 25-12 82 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் திரு. இ. செல்லையா அவர்களின் மரணச்சடங்கில் நேரில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் சகல வழிகளிலும் எங்கள் துயரில் கலந்துகொண்ட உற்றார். உறவினர், நண்பர்கள் மற்றும் யாபேருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றி நவில்கின்றோம். அத்துடன் அவரது

**அந்தியேட்டி**

துந்துபி ஆண்டு தைத்திங்கள் 11-ம் நாள் (24-1-83) திங்கட்கிழமை அதிகாலை நயினாதீவு தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியம் நண்பகல் எமதில்லத்திலும் நடைபெறும். இவ்வைபவங்களில் தாங்கள் தங்கள் சுற்றம் சூழச் சமூகந் தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

சகோதரி, மைத்துனர், மைத்துனியர்,
மக்கள், மருமக்கள்.

4-ம் வட்டாரம்,
நயினாதீவு. (5934)

பஞ்சாப் நிலைமை அகாலிகள் பிரச்னை

# இந்திரா - எதிர்க்கட்சித் தலைவர்கள் பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஜன. 22

**பஞ்சாப் நிலைமை, அகாலிகள் பிரச்னை ஆகியன தொடர்பாக இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி நேற்று எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினுர்.**

இப்பேச்சுவார்த்தையின் போது அகாலிகளின் தலைவர்களை அழைத்துப்பேசி, அவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்று எதிர்க்கட்சித்தலைவர்கள் பிரதமமந்திரியைக் கேட்டுக் கொண்டனர்.

இப்பிரச்னைக்கு சுமுகமான வழியில் தீர்வொன்றைக்காண விரும்புவதாக பிரதமமந்திரி இந்திராகாந்தி எதிர்க்கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தையின் போது அகாலிகளின் கோரிக்கைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

பிரதமந்திரி இந்திராகாந்தியுடன் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன், உள்துறை அமைச்சர் திரு. பி. சி. சேத்தி, நிதியமைச்சர் திரு. பிரணுப் முகர்ஜி, வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் ஆகியோரும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சிகளின் சார்பில் திரு. சரண்சிங், திரு. வாஜ்பாய், திரு. உன்னிகிருஷ்ணன், திருமதி சத்தியவாணிமுத்து, திரு. குப்தா உட்பட மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

அதேவேளை பஞ்சாப் முதலமைச்சர் திரு. தர்பராசிங் நேற்று பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து பஞ்சாப் நிலைமை பற்றி அவருக்கு விளக்கினுர். (வெ)

பாகிஸ்தானில்

## 33 மாணவர்களுக்கு கடும் காவல் தண்டனை!

இஸ்லாமாபாத், ஜன. 22

அனுமதியின்றி பிஸ்டல்களை வைத்திருந்த 33 மாணவர்களுக்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது.

இது தொடர்பாக 11 மாணவர்களுக்கு நீதிமன்றத்தால் சவுக்கடியும் வழங்கப்பட்டது.

பாகிஸ்தான் தொழில்நுட்ப கல்லூரிகளில் பிஸ்டல்களையும், வாள்களையும் தங்கள் அறைகளில் அனுமதியின்றி வைத்திருந்த பல மாணவர்களை பொலிசார் கைதுசெய்தனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுதலை செய்யுமாறுகோரி பாகிஸ்தானின் நகரங்களில் மாணவர்கள் கிளர்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

கராச்சியில் பாகிஸ்தானுக்கும், இந்தியாவிற்குமிடையே நடைபெறவுள்ள ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தின்போது குழப்பம் விளைவிக்கப்போவதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். [வெ]

## கள்ள 100 ரூபா நோட்டு: 2 பேர் கைது

சென்னை, ஜன. 22

திருவண்ணு நகரில் 50 கள்ள நூறுரூபா நோட்டுக்கள் வைத்திருந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர். (வெ)

## மொறீஸியஸ் பிரதமரின் இந்திய விஜயம்

புதுடில்லி, ஜன. 22

மொறீஸியஸ் பிரதம மந்திரி அடுத்த மாதம் 8ம் திகதி தமது பாரியார் சகிதம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் இவ்விஜயத்தின்போது இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியை சந்தித்து இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு, இந்துமாக்கடல் நிலைமை ஆகியன குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தென்னுபிரிக்க

# விடுதலைப் போராளிகளின் தியாக உணர்வுக்குப் பாராட்டு

புதுடில்லி. ஜன. 22

''தென்னுபிரிக்க விடுதலைப் போராட்ட வீரர்களின் அபிலாஷைகளையும், நம்பிக்கைகளையும் இந்தியா மதித்துவருகிறது''.

இவ்வாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தென்னுபிரிக்கத் தலைவருக்கு அளித்த விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், தென்னுபிரிக்க விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாக உணர்வையும், தேசப் பற்றையும் பாராட்டினுர்.

தென்னுபிரிக்கத் தலைவர் வெள்ளையர்களின் இனவெறி ஆட்சிக்கு எதிராகப் போராடும் மக்களுக்கு இந்தியா அளித்துவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

புதுடில்லியில் எதிர் வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மகாநாடு தென்னுபிரிக்காப் பிரச்னைக்குத் தீர்வை ஏற்படுத்துமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். [வெ]

## ரூ. 5 லட்சம் கடத்தல் பொருட்கள் சிக்கின!

சென்னை, ஜன. 22

மதுரையில் 5 லட்சத்து 20,000 ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

இவற்றுள் பொலியஸ்டர் துணிவகைகள், கசெட்டுகள், இலங்கைக்கு கடத்திச்செல்லவிருந்த 100கட்டு பீடி இலைகள் ஆகியன அடங்கியிருந்தன. (வெ)

## விவேகானந்தர் ஜனனதின விழா

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் இன்று சுவாமி விவேகானந்தரின் 121ம் ஜனன தின விழா இன்று மாலை நடைபெறுகின்றது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு கி. பாலகிட்ணர் தலைமையில் இவ் விழா நிகழவுள்ளது.

இவ்விழாவின் சிறப்புநிகழ்ச்சிகளாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு க. நாகேஸ்வரனின் சிறப்புரையும், மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரி அதிபர் திரு கே. ஆர். நடராஜாவின் திருமுறைபாடல் கச்சேரியும் இடம் பெறவுள்ளன.

இவ் விழா மட்டக்களப்பு கல்லடி, உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் ஆதரவில் நடைபெறுகின்றது.

அணு ஆயுதப் பேச்சுவார்த்தை:

# உடன்பாட்டிற்கு சோவியத் இணக்கம்

ஜெனிவா, ஜன. 22

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்குமிடையே ஜெனிவாவில் நடைபெற்று வரும் அணு ஆயுதப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கு சோவியத் பிரதிநிதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சோவியத் யூனியன் தெரிவித்துள்ள யோசனையை ஆராயுமாறு அமெரிக்கப் பிரதிநிதியை ஜனுதிபதி திரு. றெனுல்ட் றீகன் கேட்டுள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து நடுத்தர ஏவுகணைகளை அகற்றும் யோசனை தொடர்பாக சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தை நடத்த தமக்கு அதிகாரமளிக்கப்படவில்லை என்று அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்தார். (வெ)

மத்தியகிழக்கில் வேலைவாய்ப்பு

## இந்தோனேஷியா நாட்டம்

ஜகார்த்தா, ஜன. 22

மத்திய கிழக்கு நாடுகளில் ஒரு லட்சம் இந்தோனேஷியர்களுக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிக்க இந்தோனேஷிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தோனேஷிய அரசு தனது வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிக்கும் நடவடிக்கையில் இந்தோனேஷியர்களுக்கு மத்தியகிழக்கில் வேலைபெற்றுக்கொடுப்பதிக் கூடிய கவனமெடுத்துள்ளது.

தற்போது 50 ஆயிரத்துக்கும் அதிகமான இந்தோனேஷியர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்செய்துவருகின்றனர்.

மேலும் ஒரு லட்சம் இந்தோனேஷியர்களை மத்தியகிழக்கு நாடுகளுக்கு அனுப்பும் முயற்சியை தொழில்முகவர்நிலையங்கள் மூலம் இந்தோனேஷிய அரசு மேற்கொண்டுள்ளது. (உ)


உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

ஷப்ரு ★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்

நிதி உதவிகள்

- வர்த்தக, விவசாய உபகரண வாடகைக் கொள்வனவு உதவி
- விவசாயம், கைத்தொழில், இறக்குமதி வியாபாரம், நிதி ஏற்பாடு
- நீங்கள் விற்கவிருக்கும் காணி, விடுவளவு சிரமமின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுத்தல்
- ரி. வி. (கலர்) குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, CANON கணித்தற்பொறி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் -- உடன் விலைக்கும் அல்லது தவணை முறை அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள்

தேவை எதுவானுலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்
61, நியூ புளர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

யாழ்ப்பாணம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



சென்னை - ரூபவாகினி

நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டுகளிக்க தொலைக்காட்சி ஏரியல் அமைப்பிற்கு

வீனஸ், நியூவீனஸ்

ரி. வி., றேடியோ, மணிக்கூடுகளை உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரி. வி., றேடியோ மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்,

விரும்பிய பாடல்களை பதிவுசெய்து கொள்ளவும்,

மற்றும் மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்,

மேலும் யாழ். நகரில் உத்தரவாதத்துடன் ரி. வி. ஏரியல் பொருத்திக்கொள்ள

வீனஸ்
266/1, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.

நியூவீனஸ்
79/1,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# ‘ஜீப் வரும் சத்தம் கேட்டதும் இதயம் பலமாகஅடித்துக்கொள்ளும்’

## நீர்வேலி கொள்ளை கொலைவழக்கில் முதல் எதிரி தங்கவேல் சாட்சியம்

(இ. கந்தசாமி)

ஆனையிறவு முகாமில் நான் வைக்கப்பட்டிருந்தபோது என்னை விசாரணை செய்தவர்களில் ஒருவரான ஏ. எஸ். பி. குணசிங்கா ‘‘தமிழ் ஈழம்’’ வேண்டாம் என்று பலமுறை கோஷிக்குமாறு கூறினுர். நான் அதற்கு மறுத்தபோது பயங்கரமாகத் தாக்கினுர். தாக்குதலைத் தாக்கமுடியாது அவர் கூறியபடி ‘தமிழ் ஈழம்’ வேண்டாம் என பல தடவை கோஷித்தேன். அப்படிக் கோஷித்தும் அவர் திருப்தியடையவில்லை. ‘டோன்ட் வான்ட் ரமிழ் ஈழம்’ (Dont want Tamil Elam) என்று ஆங்கிலத்திலும் கோஷமிடுமாறு கூறினுர். அவர் சொன்னபடியே நான் ஆங்கிலத்திலும் கோஷமிட்டேன்.

உடல் ரீதியாக நான் பட்ட துன்பங்கள், வேதனைகளைவிட இதுபோன்ற இழிவுபடுத்தப்பட்ட சம்பவங்களினுல் ஏற்பட்ட மனே நரகம் தாங்கமுடியாததாகும்.

இராணுவ முகாமிலிருந்து நாம் விடுதலை செய்யப்படுவோமென்ற நம்பிக்கை எமக்குத் துளிகூட இருக்கவில்லை. ஏனெனில் எம்மைத் தாக்கிய பொலிசாரின் செயல்கள் எம்மை அப்படி எண்ணவைத்தது.

இவ்வாறு நீர்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை, இரட்டைக் கொலைவழக்கின் முதலாவது எதிரியான நடராஜா தங்கவேல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஸி. என் ரி மூனயல முன்னிலையில் நடைபெற்ற ‘வொயர் டயர்’ விசாரணையின்போது சாட்சிய மளிக்கையில் கூறினுர்.

இவ்வழக்கின் மூன்ரும் எதிரியான செல்லத்துரை சிவசுப்பிரமணியம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த வேளையில் ஏ. எஸ். பி. ஜயராம்பதிக்கு அளித்ததாகக் கூறப்படும் வாக்குமூலத்தை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக ஒரு சாட்சியமாகப் பயன்படுத்தலாமா என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காகத் தனியான விசாரணையொன்று இம்மாதம் 7ம் திகதி முதல் நடைபெற்றுவருகிறது.

இவ்வழக்கின் முதலாவது எதிரியான நடராஜா தங்கவேல் அல்லது தங்கத்துரை, இரண்டாவது எதிரியான செல்வராஜா யோகச்சந்திரன் அல்லது குட்டிமணி, 3வது எதிரியான செல்லத்துரை சிவசுப்பிரமணியம் அல்லது தேவன், 4வது எதிரியான நவரத்தினராஜா சிவபாதன் அல்லது சிவபாதம் மாஸ்டர், 6வது எதிரியான வைத்திலிங்கம் நடேசுதாசன் அல்லது செனட்டர் ஆகியோர் அழைத்துவரப்பட்டனர். 5வது எதிரியான சுந்தரம் சபாரத்தினம் இல்லாமலேயே வழக்கு நடைபெறுகிறது.

எதிரிகள் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. என். சத்தியேந்திரா, திரு. ரி. சச்சிதானந்தன், திரு. ஜி. குமாரலிங்கம், திரு. ரி. பாக்கியநாதன், திரு. ஸ்ரீநிவாசன் ஆகியோர் ஆஜராகினர்.

அரச தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. சுனில் டி சில்வா, திரு. காந்திலால் பீரிஸ், திரு. மொஹான் பீரிஸ் ஆகியோர் ஆஜராகினர்.

திரு. சத்தியேந்திரா 1ம் எதிரியின் சாட்சியத்தை நெறிப்படுத்தினுர்.

அவர் மேலும் கூறியதாவது:-

### இருபதில் ஒருபங்கு

‘நான் கைது செய்யப்பட்டபின் எனக்குச் செய்யப்பட்ட சித்திரவதைகளில் சுமார் இருபதில் ஒரு பங்கையே என்னுல் இங்கு நினைவுபடுத்திக் கூறமுடிகிறது.

ஆனையிறவு முகாமில் வைக்கப்பட்டிருந்தபோது எம்மைத் தாக்கிய பொலிசார் ஒருநாள் நீர்வேலியில் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படும் பணமான 80 லட்சத்தில் பாதிப் பணத்தைத் தந்தால் எம்மைத் தப்பி ஓடுவதற்கு அனுமதிப்பதாக வாக்குறுதி தந்தார்கள். என்னிடம் இல்லாத பணத்தை—அது யாரிடம் இருக்கிறதென்றுகூடத் தெரியாத நிலையில் நான் எப்படிப் பணம்தர முடியும் என்று நான் கேட்டபோது என்னைப் பலமாகத் தாக்கினுர்கள்.

‘முகாமில் சிலர், 18 மாதங்கள் உங்களை இதே நிலையில் தான் வைத்திருப்போம் என்று கூறினுர்கள். சட்டம் திருத்தப்பட்டுவிட்டது. 36 மாதங்கள் உங்களை இப்படித்தான் நடத்துவோம் என்று வேறுசிலர்கூறினர். 20 வருடங்களுக்கு இதே நிலைதான் என்று சிலர் கூறினர்.

‘ஆனையிறவு முகாமில் இருந்தபோது ஒழுங்காக உணவு இல்லாதது ஒருபுறம் உடல் நிலை மோசமாகிக்கொண்டே இருந்தது. உடலெங்கும் வலியாக இருந்தது. எதையுமே தாங்கமுடியாத நிலை. இச்சமயத்தில் வெளியே ஏதாவது ஜீப் வந்துநிற்கும் சத்தம் கேட்டதும் எம்மை மேலும் தாக்க வருகிருர்கள் என்ற பயத்தால் எனது இதயம் பலமாக அடிக்கத் தொடங்கிவிடும். இவ்வாறு சொல்லவே வெட்கமாக இருக்கிறது.

### எனக்காக இரங்கிய இராணுவ அதிகாரி...

ஆனையிறவு முகாமில் ஒரு அறையில் நிற்கவோ இருக்கவோ முடியாத நிலையில் இருப்புக்கதவுடன் பிணைத்து விலங்கிடப்பட்டிருந்தேன். நித்திரை கொள்ளக்கூட அனுமதிக்கப்படவில்லை. எனது நிலையைப் பார்த்து மனம் இரங்கிய இராணுவ அதிகாரி ஒருவர் பொலிஸ் அதிகாரிகளுடன் வாதாடி நான் உட்காரக் கூடியதாக எனது விலங்கைத் தளர்த்திவிட்டார்.

முகாமில் சில பொலிஸ் அதிகாரிகள் மிகவும் கொடூரமாக நடந்துகொண்டார்கள்; சிலர் எம்மீது மற்றவர்களை கொடூரமாக நடத்துவித்தார்கள். சிலர் ஒரு அடிகூட எனக்கு அடிக்கவில்லை. இவ்வாறு அடிக்காதவர்களில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஹூகொடவின் பெயர்மட்டுமே எனக்கு ஞாபகத்தில் உண்டு.

என்னைத் தாக்காத அதிகாரிகள் என்னுடன் பல தடவைகள் மணிக்கணக்கில்கூட இருந்து கதைத்துவிட்டுச் செல்வார்கள். அவர்களில் சிலர் மனப்பூர்வமாகக் கதைப்பார்கள். சிலர் விதண்டாவாதத்துக்காகக் கதைப்பார்கள். சிலர் கதைத்துவிட்டுச் சென்ற பின்னர் எமது அறைக்குவரும் வேறு அதிகாரிகள் வேறுகாரணங்களுக்காக எம்மைத் தாக்குவார்கள்.

எம்மைத் தாக்காத அதிகாரிகள் என்னுடன் எமது இன விடுதலை குறித்து கதைப்பார்கள். ஒரு நாள் ஒருவர் சிறுபிள்ளைத்தனமாக இனவிடுதலை நடவடிக்கைகளில் ஈடுபட்டு இப்போது முகாம்களில் இப்படி வீணை வந்து கஷ்டப்படுவதாக ஆரம்பத்தில் கூறினுர். அவர் தமது கூற்றுக்கு ஆதாரமாக தமிழர்கள் சிறிலங்கா அரசின் கீழ் சிறந்த வாழ்க்கை நடத்துகிருர்கள் என்றும் அதிக தமிழர்கள் அரசின் உயர் பதவிகளில் இருக்கிருர்கள் என்றும் குறிப்பாக வைத்தியத்துறையில் முக்கிய பதவி வகிக்கிருர்கள் என்றும் கூறி இவ்வாறு உயர் அந்தஸ்துடன் இருக்கும் நீங்கள் என்ன குறையினுல் இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்க முயற்சிக்கிறீர்கள் என்றும் கேட்டார்.

அதற்கு நான் பின்வருமாறு கூறினேன்:

‘‘நாம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்நாட்டை இரண்டாகப் பிரிக்க முயலவில்லை. ஏற்கனவே தமிழ் மக்களின் பூரண ஆதிபத்தியத்திற்கு உட்பட்ட தனியான எமது நாட்டின் இறைமையைப் பேணி அதன் விடுதலையைப் பெறவே நாம் போராடுகிறேம். நீங்கள் சுட்டிக்காட்டிய ஒரு சிலரைமட்டும் வைத்துக்கொண்டு தமிழர்கள் எல்லோருமே பூரண திருப்தியுடனும் பொருளாதார மேம்பாட்டுடனும் வாழ்கிருர்கள் என்று கூறமுடியுமா?

வெள்ளையர் இந்த நாட்டை விட்டு வெளியேறிய பின் மெல்லமெல்ல எம்மை தமிழரல்லாதவர்களாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலை தொடரும் பட்சத்தில் நாம் தமிழர்களாகவே தொடர்ந்தும் வாழ ஏதாவது சாத்தியக்கூறுகள் உண்டா? என்றும் அவரிடம் கேட்டேன்.

### யாழ். தமிழருக்கு என்ன குறை


ஏன் வடபகுதியில் தமிழர்களாக இல்லையா? வெள்ளவத்தையில் யார் இருக்கிருர்கள்? யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்களுக்கு என்ன குறை? அங்குள்ள தமிழர்களை தமிழர்கள் அல்லாதவர்களாக மாற்றும் முயற்சிகளில் நாம் ஈடுபடவில்லையே? என்று பல கேள்விகளை அவர் கேட்டார்.

அதற்கு நான் —

உங்கள் வாயினுலேயே நீங்கள் வடபகுதி, யாழ்ப்பாணம் என்று பிரித்து குறிப்பிடுவதை வைத்துக்கொண்டு எமது இறைமையை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள் என்பது தெரிகிறது.

### வடபகுதி யாழ். மட்டும்தான் தமிழ் ஈழம் அல்ல

யாழ்ப்பாணம், வடபகுதி ஆகியன மட்டும்தான் தமிழ் ஈழம் அல்ல; எமது பாரம்பரிய பூமியே தமிழ் ஈழம். எமது பாரம்பரிய பூமி திட்டமிட்ட முறையற்ற குடியேற்றத்தினுல் எம்மிடமிருந்து பறிக்கப்படுகிறது. இந்நிலை நீடிக்க அனுமதிக்கும் பட்சத்தில் மெல்ல மெல்ல தீவு முழுவதுமே தமிழர் அல்லாதவர்களுக்காகிவிடும் அல்லவா? இதேநிலையில் நீங்கள் ஒரு நாடு என்ற கொள்கையை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் கேட்டேன். (இ)



யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினுல் கோப்பாய் தொகுதியிலுள்ள கோண்டாவிலில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புடவை பதனிடும் ஆலைக்குரிய பாரிய தண்ணீர்த் தாங்கிக்கான அடிக்கல் நாட்டு வைபவம் சம்பிரதாய முறைப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பிக்கும்பொழுது எடுக்கப்பட்ட படம். எதிர்க்கட்சி முதல்வர் அ. அமிர்தலிங்கம், கோப்பாய் தொகுதி பா. உ. ஆ. மு. ஆலாலசுந்தரம், யாழ். மாவட்டசபைத் தலைவர் சு. நடராசா, சங்கத் தலைவர் செ. விஸ்வலிங்கம் ஆகியோரும் பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.


நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

**பொ. அம்பலவாணர்**

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.

போன்: 23199 தந்தி; வைரம்


## “அரசின்எந்த அமைப்பிலும் நீதியை எதிர்பார்க்கவில்லை”

[கொழும்பு]

தமிழ் ஈழத்தவன் என்ற முறையில் என்வரையில் சட்டவிரோத அரசு எனக் கணிக்கப்படும் சிறிலங்கா அரசின் நீதிமன்றம் மட்டுமல்ல அந்த அரசின் எந்த ஒரு அமைப்பினுலும் எமக்கு நீதி வழங்கப்படும் என நாம் எதிர்பார்க்கவும் இல்லை; அந்த உரிமையை நாங்கள் அவர்களுக்குக் கொடுக்கவும் இல்லை.

இவ்வாறு நீர்வேலி மக்கள் வங்கி கொள்ளை, இரட்டைக் கொலைவழக்கின் 1ம் எதிரியான தங்கவேல் விசாரணைக்குள் நடைபெற்றுவரும் விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அரசதரப்பு சட்டத்தரணி திரு. காந்திலால் குமாரசிறி குறுக்கு விசாரணை செய்தபோது (வெள்ளியன்று) தங்கவேல் மேலும் கூறியதாவது:

ஆனையிறவு இராணுவமுகாமில் நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது வெளியில் ஜீப் சத்தம் கேட்டதும் எனது இதயம் வேகமாக அடித்துக்கொள்ளும். வெறும் ஜீப் சத்தம் கேட்பதினுல் அப்படி இதயம் வேகமாக அடிப்பதில்லை. அந்த ஜீப் எம்மைத் தாக்குவதற்கு வரும் அசுரத்தனம் கொண்டவர்களை ஏற்றிக்கொண்டு வருவதனுலேயே இருதயம் அவ்வாறு வேகமாக அடிக்கத் தொடங்கியது. நான் அநியாயமாக உயிர் இழப்பதை விரும்பவில்லை.

அரச சட்: நீர் உமது உயிரைக்காப்பாற்ற விரும்புவது போல் சித்திரைவதையிலிருந்து தப்பிக் கொள்ள விருப்புவதில்லையா?

தங்: அநாவசியமாக சித்திரவதைப்படுவதை விரும்பும் எந்த ஒரு ஜீவனும் இந்த உலகத்தில் இருப்பதாக நான் எண்ணவில்லை. இந்தக் கேள்விக்குப் பின்னர்தான் அப்படியும் இருக்கிருர்களா என சந்தேகம் ஏற்படுகிறது.

அரச சட்; உங்களது வாக்குமூலங்களை இந்த நீதிமன்றம் ஏற்பதனுலோ ஏற்காமல் விடுவதனுலோ உங்களுக்கு ஏற்படும் சாதகபாதகங்கள் பற்றி உமக்கு அக்கறை இல்லையா?

தங்: சிறிலங்கா அரசினுலும் அதனை இயந்திரங்களினுலும் இதுவரை எமக்கு இழைக்கப்பட்ட பாதகங்கள் இவைகளைவிட இனிமேல் இவர்களால் ஏற்படஇருக்கும் சாதகபாதகங்கள் எவ்வாறிருக்கும் என சீர்தூக்கிப்பார்க்கும் அளவுக்கு அதனை நான் பெறுமதியான விஷயமாகக் கருதவில்லை.

எந்த விஷயமும் இதுவரை எமக்கு நியாயமாக நடத்தப்படவில்லை. இனியும் நடக்கும் என நாம் எண்ணவில்லை. அவர்கள் நடத்துகிருர்கள் நாம் நடத்தப்படுகிறேம்.

சட்: இந்த நீதிமன்றம் உங்களது வாக்குமூலத்தை ஏற்றுக்

(5-ம் பக்கம் பார்க்க)

# "சுதந்திரதின கொண்டாட்டங்களை பகிஷ்கரிக்க வேண்டும்"

## கம்யூ. கட்சி (இடது) வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சுதந்திரதின கொண்டாட்டங்களை நாட்டின் சகல ஜனநாயக தேசபக்த சக்திகளும் பகிஷ்கரித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

இலங்கை கம்யூனிஸ்கட்சி (இடது தேசிய அமைப்பு கமிட்டிசெயலாளர் திரு கே. ஏ. சுப்பிரமணியம் கட்சியின் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அண்மைக்காலத்தில அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட அரசியல் மோசடிகளையும், அடக்குமுறைகளையும் நியாயப்படுத்துவதற்கும், அடுத்து எடுக்கப்படவுள்ள பாசிச நடவடிக்கைகளுக்கு ஜனநாயக முலாம்பூசி மக்களையும் வெளிஉலகையும் ஏமாற்றுவதற்குமேசுதந்திரதின-ஜனாதிபதிதின வைபவங்கள் மிகக் கோலாகலமாக நடத்தப்படவுள்ளன. இத்தகைய கொண்டாட்டங்களை நாட்டின் சகல ஜனநாயக தேசபக்த சக்திகளும் பகிஷ்கரித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

அண்மையில் அடுத்தடுத்து நாட்டில் இடம்பெற்ற இரு தேர்தல்களும், அவற்றில் அரசு பின்பற்றிய நடைமுறைகளும் நமது நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக வழிமுறைகளையும் குழிதோண்டிப் புதைத்துள்ளன. தமது தவறான பொருளாதாரக்கொள்கையை நடைமுறைப்படுத்தி மக்களை மேன் மேலும் கஷ்டத்திற்குஆளாக்குவதற்கு அரசு அடக்குமுறைகளைத் தீவிரப்படுத்தி உள்ளது. இத்தனைக்கும் மத்தியில் அரசுக்கு எதிரான மக்களின் வெறுப்பும் எதிர்ப்பும் வளரவே செய்கின்றன இந்நிலைமைகளை மறைத்து ஒரு போலி ஜனநாயகத்தோற்றத்தை வெளிக்காட்டவே சுதந்திரதின-ஜனாதிபதிதின வைபவங்கள் மிக ஆடம்பரமாக நடாத்தப்படவுள்ளன. இவற்றை பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஏனைய சில எதிரணிக் கட்சிகளும் பகிஷ்கரிக்க முன்வந்துள்ளமை வரவேற்கக்கூடியதேயாகும். அதேவேளை நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளின்மீதும், ஜனநாயகத்தின் மீதும் அக்கறைகொண்ட சகல ஜனநாயக தேசபக்த சக்திகளும் இப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுத் தமது வன்மையான எதிர்ப்பை அரசுக்கு உணர்த்துவது இன்றைய நிலையில் மிகவும் பொருத்தமான ஒரு எதிர்ப்பு நடவடிக்கை என எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) கருதுகின்றது.

(க)

### அரசின்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டால் என்ன ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன அதுபற்றி உமக்கு அக்கறை இல்லையா?

தங்: நாம் அளித்ததாகக் கூறப்படும் வாக்குமூலத்தை (?)ந்த நீதிமன்றம் ஏற்றுக் கொண்டால் வழமையான ஸ்ரீலங்கா அரசும் அதன் நிர்வாகமும்தான் என நினைப்பேன்—

ஏற்றுக்கொள்ளாவிட்டால் பரவாயில்லையே, ஸ்ரீலங்காவில் இன்னமும் நீதி செத்துவிடவில்லை என எண்ணுவேன்.

சட்: 2ம் எதிரி இங்கு சாட்சிக்கூண்டில் நின்று சிறிலங்கா நீதிமன்றத்திலெமக்கு நீதிகிடைக்காது என்று தெரியும் என்று கூறியதை கேட்டீர் தானே.

தங்: இதுவரை எங்களுக்கு நடந்த முறைகளை வைத்துக் கொண்டே அவர் (குட்டிமணி) அப்படி கூறினர். சிறிலங்கா அரசின் நீதிமன்றங்களிலிருந்து நீதிகிடைக்கும் என எதிர்பார்க்கவில்லை அவ்வாறு எதிர்பார்த்து இங்கு கேள்விகளுக்குப் பதில்கூறவும் இல்லை.

(இ)

# நாடக மேடைகளை பளிச்சிட செய்தவர்

பிரபல ஒலி, ஒளி அமைப்பாளரான ஜேஸ் ஆர்ட் யோசேப் அவர்கள் அண்மையில் காலமான செய்தி, பலரது நெஞ்சங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகும்.

வாலைழத்தார்ப் பந்தத்தில் தூங்கி வழிந்து, பின் 'காஸ் லைற்' றிலும், 'பெற்றோமாக்ஸ், ஸிலும் மினுமினுத்துக்கொண்டிருந்த நமது நாடகமேடைகளைப் பளிச்சிடச்செய்த பெருமைக்குரியவர் யோசேப். 1940ஆம் ஆண்டுகளில் முதன் முதலாக ஒரு 'லைற்' எஞ்சினை வாங்கி வடஇலங்கை முழுவதும் நாடக மேடைகளை மின்சார வெளிச்சத்தால் பிரகாசமடையச் செய்ததுடன், வர்ணக் காட்சிகள், 'ஃபோக்கஸ்' 'ஸ்பொட்' போன்ற வசதிகளுடன் ஒலி அமைப்பினையும் செய்துகொடுத்து. இன்றைய தமிழ்நாடகத்தின் கலை நுட்ப வளர்ச்சிக்கு முன்னோடியாகச் சிறந்த பணியாற்றினார். மேடையில் தோன்றும் பாத்திரங்களைத் தனது கைவண்ணத் திறன் தத்ரூபமாக்கும் ஒப்பனைக் கலையிலும் வல்லவராக விளங்கினார்.

ஆரம்பத்தில் புகைப்படக் கலையிலேயே ஆர்வம்கொண்ட யோசேப், யாழ். நகரில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் தோன்றியவற்றுள் ஒன்றாக, தனது ஜேஸ் ஆர்ட் ஸ்ருடியோவை ஆரம்பித்தார். காலகதியில் புகைப்படத்துறையைக் கைவிட்டு, ஒலி, ஒளி அமைப்புத் துறையிலேயே கவனம் செலுத்தினார். எனினும் அவரது ஸ்ருடியோவின் பெயரிலேயே ஒலி ஒளி அமைப்பு ஸ்தாபனம் இயங்கலாயிற்று. அவருக்கும் ஜேஸ் ஆர்ட் யோசேப் என்றுபெயராயிற்று. மிகவும் நவீன முறையில் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய நாடகக் கலைநுட்பத்

[8-ம் பக்கம் பார்க்க]

# பிரார்த்தனையும் பஜனையும்

(யாழ்ப்பாணம்)

சுவாமி பிரேமானந்தாவின் பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் இம்மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை சுன்னாகம் பூபால கிருஷ்ண ஆச்சிரமத்தில் பிற்பகல் நடைபெறவிருக்கிறது

பிலிப்பைன்ஸ், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு சுவாமி சென்றிருந்தமையால், வழமையாக மாதத்தில் இரண்டாம் திங்கட்கிழமை நடைபெறும் பஜனைக்குப் பதிலாக இப்பஜனை நடைபெறும். [க]




## செபஸ்தியார் திருநாள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஓட்டுமடம் புனித செபஸ்தியார் திருநாள் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி தினமும் மாலை செப ஆராதனை வழிபாடுகளுடன் திருப்பலி பூசை நடைபெறுகின்றது. திருநாள் திருப்பலி பாடற்பூசை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஏழுமணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து திருச்சுரூப பவனி நடைபெறும். திருநாள் ஒழுங்குகளை பங்குத்தந்தை அருட்திரு பீ. எம். இம்மனுவல் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

## ஜே.பி.க்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

திரு. நாகமுத்து சின்னத்துரை சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி உடுவில் ஞானப்பிரகாசர் சனசமூக நூலநிலையம் அவருக்கு விழாவொன்றை நடத்தியது.

இவ்விழாவில் இவரின் சேவைகள் குறித்து யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எஸ். பற்றிக் பாராட்டிப் பேசினார். திரு. நா. பத்திநாதன் பாராட்டுப்பத்திரம் வழங்கினார்.

திரு. சின்னத்துரை தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

## மூதாட்டியை கட்டிவைத்து கொள்ளை!

(கிளிநொச்சி)

முகமூடி அணிந்த கொள்ளைக் கோஷ்டியினர் வியாபார நிலையமொன்றில் இருந்த வயோதிப மாதை ஆயுதமுனையில் பயமுறுத்திக் கொள்ளையடித்துள்ளனர்.

இத் துணிகரக் கொள்ளை குடிசன நெருக்கமாக உள்ள கிளிநொச்சி ஜெயந்தி நகரில் நள்ளிரவில் நடைபெற்றது.


பிரஸ்தாப வியாபாரநிலையத்தின் அருகில் உள்ள சிவபாதம் என்பவரது வீட்டில் டி. வி. படம் காட்டப்பட்டது. மேற்படி படத்தைப் பார்ப்பதற்கென வியாபார நிலைய உரிமையாளர் எஸ். திருநாவுக்கரசுவும் அவரது நான்கு பிள்ளைகளும் சென்றனர். வியாபார நிலையத்தை பூட்டிவிட்டு பின்பக்கமாக உள்ள வீட்டில் உள்ள அறை ஒன்றில் சாய்வு நாற்காலியில் திருநாவுக்கரசுவின் மனைவியான வயோதிபமாது உறங்கிக்கொண்டிருந்தார்.

கடை உரிமையாளரும் குடும்பத்தினரும் டி. வி. யில் காட்டப்பட்ட படத்தைப் பார்க்கப்போனதை நன்கு அறிந்த கொள்ளைக் கோஷ்டியினர் வியாபாரநிலையத்தின் பின்னால் இருந்த வீட்டில் புகுந்து கத்தி, வாள் போன்ற ஆயுதங்களை காட்டி அங்கிருந்த வயோதிப மாதைப் பயமுறுத்தி அவரைச் சாய்மனைக் கட்டிலுடன் சேர்த்துக் கட்டிவைத்து வாய்க்குள் சீலையைத் திணித்துவிட்டுப் பின்னர் கடைத்திறப்பைப்பறித்து கடையைத் திறந்து அங்குள்ள சுமார் 1000 ரூபாவையும் பெறுமதிவாய்ந்த பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

கொள்ளையர்வெளியே சென்றதும் கட்டுகளை அவிழ்த்துக் கொண்ட அப் பெண் கூக்குரலிட்டார். ரி. வி. பார்த்துக் கொண்டிருந்தோருக்கு கூக்குரல்சத்தம் கேட்கவே சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு ஓடிவந்தபோது கொள்ளை நடந்தது தெரிய வந்தது.

இக் கொள்ளைச் சம்பவம் பற்றி கிளிநொச்சிப் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். (அ)


# உடன் அதிர்ஷ்டத்திற்கு



# அபிவிருத்தி லொத்தர்

## வாங்கி! இணைத்து! வெல்லுங்கள்!

## ரூ. 100,000/-, 10,000/-, 1,000/-

## 500/-, 100/-, 20/-, 10/-,

## பரிசுகள்

## தொடர்ந்து வழங்கப்படும்

## ஒவ்வொரு ஏழு டிக்கட்டுகளில் ஒன்று பரிசைப் பெற்றுத்தரும்

## சீட்டிழுப்பு கிடையாது


## பணத்தை உடனே பெறலாம்

ஒரு டிக்கட்டின் விலை ரூ. 10/- மட்டுமே. ஒவ்வொரு டிக்கட்டிலும் வெள்ளி ஓலையினால் மறைக்கப்பட்ட ஆறு சதுரங்கள் உள்ளன. ஆறு சதுரங்களையும் ஒரு நாணயத்தினால் மெதுவாகத் தேய்த்து அழியுங்கள். மூன்று சதுரங்களில் ஒரே தொகை காணப்பட்டால் அவற்றுள் ஒன்றில் உள்ள தொகையே உங்கள் பரிசு. உ-ம்:— மூன்று சதுரங்களில் ரூ. 100/- இருந்தால் உங்களுக்குரிய பரிசு ரூ 100/- உடன் அதிர்ஷ்டத்திற்கு மூன்று விரைவான இலகுவான வழிகள்.

எச்சரிக்கை: "நீக்கினால் செல்லுபடியாகாது" என்ற வாசகத்தை தயவு செய்து அழியாதீர்கள். அது உங்கள் பாதுகாப்புக்காக உள்ளது. அதனை அழித்தால் டிக்கட் செல்லுபடியாகாது.

- ரூ. 10/- முதல் ரூ. 100/- வரையான பரிசை டிக்கட் விற்பனை செய்த ஏஜென்டிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- ரூ. 500/- முதல் ரூ. 1,000/- வரையான பரிசுப் பணத்தை எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.
- ரூ. 10,000/- முதல் ரூ. 100,000/- வரையான பரிசுப் பணத்தை கொழும்பு 1, மத்திய வங்கி, திட்ட அமுலாக்கல் அமைச்சு, அபிவிருத்தி லொத்தர் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்

இலாபம் தரும நிதிக்கு



## நாடு முழுவதும் உள்ள ஏஜென்டுகளிடம் கிடைக்கும்

## வடபகுதியில் கைத்தொழில் அபிவிருத்தி திட்டங்கள்:

# கிராமியக் கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் பல்வேறு கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை கிராமியக்கைத் தொழில் அபிவிருத்தியமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

இத்திட்டங்கள்தொடர்பாக அமைச்சர் திரு. எஸ் தொண்டமான் தமது அமைச்சின் அதிகாரிகளுடனும், வெளிநாட்டு நிபுணர்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

### முல்லைத்தீவு

அமைச்சரின் ஆலோசனையின் பேரில், இத்திட்டத்தின் முதல் கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பனை ஓலைகளின்மூலம் கால்நடை உணவு உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப் படும்.

இதுதொடர்பான ஆலோசனைகளை இந்தியாவை சேர்ந்த பனம்பொருள் உற்பத்தித் துறை நிபுணரான திரு.சம்பந்தன் வழங்கியுள்ளார்.

வடக்கில் சிறு கைத்தொழில் இணைக்களத்தின்மூலம் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் இடங்கள் வருமாறு:

### துன்னாலையில் கைப்பணி நிலையம்

துன்னாலை தெற்கில் கைப்பணி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும். பனைமரத்தின்மூலம் கைப்பணிப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகள் இங்கு மேற்கொள்ளப் படும்.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை கைதேர்ந்த கைப்பணியாளர்களை இதற்கெனத் தெரிவுசெய்யும். இதற்கான கட்டட, நிதி வசதிகளையும் சபை வழங்கும். உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருள்களை சந்தைப்படுத்தும், விற்பனை செய்யும் பொறுப்புகளை சபை ஏற்றுக் கொள்ளும்.

### பொம்மை உற்பத்திநிலையம்

நெல்லியடியில் பொம்மை உற்பத்தி நிலையமொன்று அமைக்கப்படும்.

மட்டுவில்,பனை ஆகிய இடங்களில் பனந்தும்புத் தொழிற்சாலைகள் நிறுவப்படும்.

கரவெட்டி, வேலணை ஆகிய இடங்களில் கூடைஉற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும்.

### பொறியியல் தொழில் நிலையம்

அச்சுவேலியில் இலகுபொறியியல் தொழில்நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும் இங்குவேலையற்ற இளைஞர்களுக்கு தொழில் நுட்பத்துறையில் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சிபெற்று வெளியேறும் இளைஞர்களுக்கு அச்சுவேலி கைத்தொழில்பேட்டையில் வேலைவாய்ப்புக்கள் அளிக்கப் படும்.

புதுக்குடியிருப்பில் தச்சுப் பயிற்சிப் பாடசாலையொன்று அமைக்கப்படும்.

இத்திட்டங்களை வெகுவிரைவில் ஆரம்பிக்குமாறு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

(வெ)

---

## முத்தமிழ் சனசமூகநிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: சி. அருமைத்துரை, உபதலைவர்: இ. தவராசா, செயலாளர்: கு. கனகலிங்கம், உபசெயலாளர்: ச. நாகராசா, பொருளாளர்: ப. இரத்தினராசா, உபபொருளாளர் வீ. இராசதுரை, விளையாட்டுப் பொறுப்பாளர்: ப. ஆனந்தராசா, கலைப்பொறுப்பாளர்: வீ.ஞானசேகரம், சிரமதானப் பொறுப்பாளர்; நா. கிருஷ்ணபிள்ளை, சமயப் பொறுப்பாளர்: மு. அருமைராசா, கல்விப் பொறுப்பாளர்: ஆ. தர்மலிங்கம், நிலையப் பொறுப்பாளர்: மு. அருமைராசா.

---

## உதை பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டு கழகத்திற்கும் நல்லூர் ஜனசக்தி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே உதை பந்தாட்டப் போட்டியொன்று இன்றுபிற்பகல் சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு திரு க.சிவலிங்கம் மத்தியஸ்தராக கடமையாற்றுவார்.

(ரு)

---

### மல்லாகம் கொலை வழக்கு

## தொகுப்புரை ஆரம்பம்!

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் கொலை வழக்கில் சட்டத்தரணிகளின் தொகுப்புரை ஆரம்பமானது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது.

1ம் எதிரியின் சட்டத்தரணி எஸ். பாலா தம்பு நேற்று முன்தினம்சுமார் 2 மணிநேர தொகுப்புரை நிகழ்த்தினர்.

(உ)

---

## சிரமதானமூலம் வீதி துப்பரவு

(புலோலி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஆவரங்கால் விவேகானந்தா இளைஞர் கழக உறுப்பினர்கள் ஆவரங்கால் இந்து மன்ற வீதியையும், புத்தூர் அரசினர் வைத்தியசாலையையும் சிரமதான முறையில் துப்பரவுசெய்துள்ளனர்.

கழகத்தலைவர் திரு ஸ்ரீவசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானத்தில் இளைஞர்கள், யுவதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்து மன்ற வீதி சிரமதானப் பணியைக் கழக ஆலோசகர் திரு இ. மயில்வாகனமும், புத்தூர் அரசினர் வைத்தியசாலைச் சிரமதானப் பணியை டாக்டர் கே. இராமகிருஷ்ணனும் தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு2-30
சந்திரசேகர் - சுஹாஜினி
பாலைவனச்சோலை

கடைசி சிலதினங்கள்
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
3-2-83 முதல்
சிவாஜி-சாவித்திரி
கர்ணன்
[ஈஸ்ட்மன் கலர்]

றீகல் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். (இருவேடம்) — சரோஜாதேவி - ரத்னா
எங்க வீட்டுப் பிள்ளை

தென்னகத்தில் பல படங்களின் சாதனைகளை முறியடித்த ''பாரதிராஜா''வின் பொன்விழா சித்திரம்.
ஹரன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
''நிறம் மாறு பூக்கள்,' புகழ்
✶ சுதாகர் ✶ ராதிகா நடித்த
கிழக்கே போகும் ரயில் (கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் : ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி - விஜயா - நம்பியார் நடித்த
ராமன் எத்தனை ராமனடி

சாந்தி- (யாழ்நகர்) 10.30, 2.30, 6.30 9.45
முத்துராமன், ராஜஸ்ரீ, மேஜர்.., சௌகார்..
நாகேஷ், பாலையா. கே. பாலச்சந்தரின்
"பாமா விஜயம்"
இதுவே யாழ் நகரில் கடைசித்தடவையாக காண்பிக்கப்படும் புதிய பிரதி

மனோகரா
[யாழ்நகர்] தினசரி10-30, 2-15, 4-45, 7-00 9-30p.m.
Weng Weng in
FOR YOUR HEIGHT ONLY
(Bond Film color)

வின்ஸர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
4-வது HOUSE FULL வாரம்
அலைமோதும் பெண்கள்கூட்டம்
ஆனந் [சிவாஜி கணேசன்]
தன்னுடைய காதலிக்காக (வாணிஸ்ரீ)
கட்டிய மாளிகை
உங்கள் குடும்பத்துடன் விஜயம்செய்யுங்கள்
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்





எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல் வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன் ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

புதிய நிர்வாகத்தில்
Patrician Industrial Institute
சேவையே எங்கள் நோக்கம்,
வியாபாரம் அல்ல

புதிய வகுப்புகள்
ஆரம்பம் 15-2-83
(1) CITY AND GUILDS (Electrical Engineering)
மாதம் ரூபா 75/-
(2) WIRING
மாதம் ரூபா 75-/
(3) MOTOR MECHANISM
மாதம் ரூபா 90/-
(4) WELDING TECHNOLOGY
மாதம் ரூபா 95/-
(5) LATHE WORK
மாதம் ரூபா 150/-

குறைந்த விலையில்
சிறந்த முறையில்
செய்யும் வேலைகள்
(1) இரும்பு கேற், கிறில், கதிரைகள்
(2) சகல விதமான, வெல்டிங் லேத்மெஷின் வேலைகள்
(3) வயறிங் வேலைகள்
(4) சகலவிதமான மின் உபகரணங்கள் திருத்துதல், மோட்டார், ஆமேச்சர் றீவைண்டிங் வேலைகள்

தொடர்பு கொள்ளுங்கள்:
OIC
Patrician Institute
59, St. Patrics Road
JAFFNA.
5928

## "தனக்குப் பிடித்த அரசியலை நடத்த

# தனிநபர் மனித உரிமை காப்பாற்றப்படவேண்டும்"

## புலேந்திரன் கொலை; சு. க. கண்டனம்

(வவனியா)

ஐக்கிய தேசியக்கட்சி வவனியா மாவட்ட அமைப்பாளர் புலேந்திரன் என்ன காரணத்திற்காகவோ கொலை செய்யப்பட்ட இந்த அரசியல் கொலையை வன்னி மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்புக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன"

வன்னிமாவட்ட சுதந்திரக்கட்சி பிரதம அமைப்பாளர் திரு. மு. நடராசா விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

"மக்கள் வாக்கு மூலமே அரசியல் பிரச்னைகளை தீர்க்கப்பட வேண்டு மென்பதில் நாங்கள் தளராத நம்பிக்கை கொண்டவர்கள். கொலை, பலாத்காரம் மூலம் அரசியல் பிரச்னைகளை தீர்க்க முற்பட்டால் எம்மை அழிவுப்பாதையில் தான் இட்டுச் செல்லும்.

"ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரமாகச் சிந்தித்து செயலாற்றவும் தனக்கு பிடித்த அரசியலை நடத்த இருக்கும் தனிநபர் மனித உரிமை எக்காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் காப்பாற்றப்பட வேண்டும்.

"நாம் கொள்கையளவில் மாறுபட்டாலும் நண்பன் புலேந்திரன் ஆற்றிய சேவைகளை பாராட்டும் அதேவேளையில் துயரத்தில் வாடும் புலேந்திரனின் மனைவி, மக்கள், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (ச)

## வாடகைக்கு

யாழ். கொட்டடி இல: 19 சிவன்பண்ணை வீதியில் 2 படுக்கை அறை 1 ஹோல், 1 ஆபிஸ் அறை, குசினி, 1 ஸ்ரோரும், பாதிரூம், கழிவறை (நீர டைப்பு) கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 492/1 காலிவீதி, கொழும்பு-6

5901

## நாடக மேடைகளை..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைக்கு யோசேப்பின் ஒலி, ஒளி அமைப்புமுறை ஈடுகொடுக்கமுடியாத அளவுக்கு இருந்தாலும், கலியாணக்கொண்டாட்டங்கள், பாடசாலை விழாக்கள், கோயில் திருவிழாக்கள், அரசியல் மேடைகள் என்றெல்லாம் பலராலும் அவரது சேவை விரும்பப்பட்டதுடன் தமிழ் அரசியல்தலைவர்களின் அன்புக்கும் பாத்திரரானார். இவற்றுக்கெல்லாம் அன்னாரின் இனிய சுபாவம் முக்கிய காரணமாயமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகத்தை உருவாக்கும்பின்னணியில், எதுவிதபடாடோபமுமின்றி தொழில் முறையில் மட்டுமின்றிக் கலைத்துறையிலும், தனது பராமரிப்பிலேயே பலரை உருவாக்கிய யோசேப்பை, அவருடன் பழகியவர்கள் எல்லோரும் 'பப்பா' என்று அன்பாக அழைத்தமை, சமூகத்தில் அவர் வகித்த பாத்திரத்தை எடுத்துக் காட்டுவதாய் அமைந்தது.

என். கே. ஆர்

## மாவத்தகமவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்லஸ்து வீழ்ந்த இடத்தில் 10 அங்குல விட்டத்தில் எரிந்த உருக்குப் பொருள் வீழ்ந்தது போன்ற அடையாளம் காணப்படுவதாகவும், பட்டாஸ் வெடித்த மணம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அவ்விடத்தைப் பொலிசார் வேலி போட்டுத் தடுத்துள்ளனர். ஸ்தலத்திற்கு விஞ்ஞானிகள் குழுவொன்று விரைந்துள்ளது.

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல மரத்தளபாட விற்பனையாளர் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகள் வெற்றிடமுண்டு

1. "பொலிசிங்" செய்பவர்கள், மரத்தளபாடங்களை நாளாந்த கூலி அடிப்படையிலோ, உருப்படிக்கணக்கில் வேலை செய்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. சிறு பையன்கள் விற்பனை உதவியாளர்

நேரில் வரவும்

### டில்கா பேணிச்சர் பலெஸ்

234, 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24186

## வடஇலங்கை ஆசிரியர்கள் - மாணவர்களுக்கு இனிப்பான செய்தி

இலங்கை தேசிய கடதாசிகூட்டுஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட

### அப்பியாசக் கொப்பிகள்

சகல வகையான பாடசாலை உபகரணங்கள் மற்றும் "மெற்ருலிக்ஸ்" METALIX MATHAMETICAL SET - STANDARD - கொம்பாஸ் வகைகள் போதிய கையிருப்பிலுண்டு.

விலை ரூபா 35-00

15% - 20% ———— விசேட கழிவு

ஏமாற்றத்தைத் தவிர்க்க விரையுங்கள்

### அம்பலவாணர் அன் சன்ஸ்

(யாழ். நகரில் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24291

குறிப்பு: ஞாயிற்றுக்கிழமையான இன்று காலை 9-00 மணி முதல் எமது நிறுவனம் வியாபாரத்திற்காக திறந்திருக்கும்

## இப்படியும் நடக்கிறது

கடந்த மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையின் விடைத்தாள்கள் இப்பொழுது திருத்தப்படுகிறது.

திருத்த 'வேலைகள்' கள் பொலிஸ் பாதுகாப்புடன் மின்னல் வேகத்தில் நடக்கிறது.

விடைத்தாள்களைத் திருத்துபவர்கள் பொதுவாக அந்தந்தப் பாடங்களில் விசேட தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்றும் உயர்வகுப்புகளில் போதிக்கும் ஆசிரியர்களே விடைகளைத் திருத்துவார்கள் என்றும் யாரும் எதிர்பார்ப்பது பெரும் புதினமல்ல.

ஆனால்—

ஐந்தாம் வகுப்புக்குட்பட்ட வகுப்புகளில் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களும் விடைத்தாள்களைத் திருத்துவது என்றால்......?

அதுவும் இவர்கள் திருத்துவது சைவ சமய பாடம் உட்பட ஓரிரு பாடங்களாகும்!

— ஊடுருவி

## இறுதிச்சடங்கு..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றும் அரசபணி மனைகளிலும் வெள்ளைக்கொடிகள் பறிக்கவிடப்பட்டுள்ளன.

நேற்று பிற்பகல் வந்த யாழ். தேவி வவனியாவில் நின்றபோது பிரயாணிகள் அனைவரும் திரு. புலேந்திரன் இல்லத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர் இதனால் ரயில் 10 நிமிட நேரம் தாமதித்தே புறப்பட்டது.

இறுதிக்கிரிகைக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரனும் மாவட்ட அமைச்சர் திரு மகிந்தசோமவும் ஈடுபட்டுள்ளனர்.

வவனியா மாவட்ட கிளை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. சி. வேதாரணியம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் திரு. புலேந்திரனின் மறைவுக்கு தமது கட்சியின் ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ளார்.

இதேசமயம் இக்கொலை தொடர்பான புலன் விசாரணைகளைத் தொடர்வதற்காக குருநகரில் இருந்து இரகசியப் பொலிஸ் கோஷ்டி யொன்று இங்குவந்துள்ளது.

திரு. புலேந்திரனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று முன்னாள் யாழ்ப்பாணம் திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ கொழும்பு மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு நோபல் வேதநாயகம் திருகோணமலை மாவட்ட அமைச்சர் திரு. நெல்சன், திருகோணமலை அரசாங்க அதிபர் ஐ. தே. கவின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான டாக்டர் ஜோன் பிள்ளை இல்மினட்கனிப் பொருள் கூட்டுத்தாபன தலைவர் திரு. ஆர். எஸ். சிறிசேன புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபன இயக்குநர் திரு பியதாஸ பெரேரா வவனியா ஏ. எஸ். பி. திரு. எஸ் சிவேந்திரன் ஆகியோரும் வந்திருந்தனர்.

## கூட்டணி.....

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடுத்த நடவடிக்கை என்ன?

ஏப்ரல் மாதம் நடக்கப் போகும் கூட்டணியின் மகாநாட்டில்தான் தெரியும். இது ஒருபுறமிருக்க இன்றைய நிலையில் பொதுமக்களின் நிலையையும், கட்சிகளின் நிலையையும் ஆராயப்பட வேண்டியது அவசியம்.

இன்றைய இலங்கையின் அரசியல் நிலையில் பொதுமக்களின் அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களைவிடக் கட்சிகளுக்கே அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது இப்படிச் செய்வதின் காரணமாக சில நன்மைகளும் உண்டு; இந்த நிலையில் நாம் எமது கூட்டணியை நன்கு பலப்படுத்தி வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது.

"இலங்கையைப் பொறுத்த அளவில் இலங்கை வாழ் பொதுமக்கள் தமது விருப்பம் போல், தமது வாக்குச் சுதந்திரத்தைப் பாவித்து, தங்களுக்கு ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியைத் தெரிவு செய்யக்கூடிய நிலை இப்பொழுது இல்லை. சர்வஜன வாக்கெடுப்பைத் தொடர்ந்து அந்த உரிமை நிலை சில காலம் பின் தள்ளப்பட்டுள்ளது.

## பத்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டு ஓடிப் பொதுமக்களின் உதவியுடன் ஒருவரை மடக்கிப் பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைத்ததும் அவரது விசாரணையிலிருந்து மேலும் ஒன்பது சந்தேகநபர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

## மரண அறிவித்தல்

### திருமதி அகிலாண்டம் சிவசோதி

திருமதி அகிலாண்டம் சிவசோதி 21-1-83-ல் காலமானார். இவர் செல்லையா சிவசோதியின் அன்பு மனைவியும், வல்லிபுரம் (முன்னாள் P. W. D. பாலம் பிரிவு) முத்துக்குமாரு (யாழ். அரசினர் வைத்தியசாலை) பாலசுப்பிரமணியம் (யாழ் அபிவிருத்திச்சபை அலுவலகம் சுழிபுரம்), பூலோகசிங்கம் (இலங்கைத் தூதரகம் குவைத்) ஆகியோரின் அருமைத் தாயாரும் கமலேஸ்வரி, ஞானேஸ்வரி, விமலா அருளேஸ்வரி, ஜெயமணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக 23-1-83 ஞாயிறு பகல் 11 மணிக்கு 618, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5946

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் ... 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.